C.C./698/2024

PW – 2

பெயர்: பார்வதி

தேதி: 02.06.2026.

<u>எதிரி தரப்பில் அ.சா.2 ஐ மீண்டும் அழைக்க மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பபட்டதின் பேரில் குறுக்கு விசாரணை</u>

எனக்கும் சேகர் வீட்டுக்கும் இடையில் முடுக்கு பிரச்சனை உள்ளதா என்றால் உள்ளது. எனக்கும் சம்பவம் நடந்ததாக சொல்லும் முந்தைய நாள் சேகர் மனைவியிடம் நான் சண்டை போட்டேன் என்றால் இல்லை. சண்டை நடந்ததை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சண்டை போட்ட பின்னர் அ.சா.1 என்னிடம் வீட்டிற்கு வந்து என்ன நடந்தது என சொன்னாரா என்றால் ஒரு பிள்ளை வந்து தாத்தா விழுந்து கிடக்கிறார் என சொன்னது. அதன்பின் நான் வேகமாக சென்று ஆட்டோவில் என் கணவரை வைத்துக் கொண்டு கடையம் காவல் நிலையத்திற்கு சென்றேன். காவல் நிலையம் சென்ற பின்பு எங்கு சென்றேன் என்றால் கடையம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு தண்ணீர் கொடுத்த போது இறங்கவில்லை. அதனால் ஊசி போட்டு தென்காசி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தார்கள். தென்காசி அரசு மருத்துவமனைக்கு செல்லும் போது மணி என்ன இருக்கும் என்றால் நான் படிக்கவில்லை என்பதால் தெரியாது. தென்காசி அரசு மருத்துவமனைக்கு போனபின்பு கடையம் காவல் நிலையத்தில் இருந்து வந்து விசாரித்தார்கள். போலிசார் வரும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் கருக்கலில் வந்தார்கள். மருத்துவமனையில் மருத்துவரிடம் என்ன சொன்னேன் என்றால் பக்கத்தில் உள்ளவர் அடித்துவிட்டார் என சொன்னேன். என் கணவருக்கு ரத்த காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. தற்போது வரை மூச்சு பிரச்சனை உள்ளது. தென்காசி அரசு மருத்துவமனைக்கு என் கணவரை கொண்டு சென்றபோது முழித்து இருந்தாரா அல்லது மயக்கநிலையில் இருந்தாரா என்றால் சத்தமே இல்லாமல் இருந்தார். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது எல்லாம் பொய் என்றாலும், சேகருக்கும் எங்களுக்கும் இடப்பிரச்சனை உள்ளதை வைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

C.C./698/2024

PW – 1

பெயர்: லெட்சுமணன்

தேதி: 02.06.2026.

<u>எதிரி தரப்பில் அ.சா.1ஐ மீண்டும் அழைக்க மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பபட்டதின் பேரில் குறுக்கு விசாரணை</u>

சேகர் வீடு என் வீட்டுக்கு முன்பக்கமாக தெருவை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். தற்போது 7,8 வருடங்களுக்கு முன்னர் தான் சேகர் என்பவர் புதிதாக இடம் வாங்கி வீடு கட்டினார் என்றால் சரிதான். தெருவில் இருந்து எனது வீட்டிற்கு சேகர் வீட்டு முடுக்கு வழி தான் போக முடியும் என்றால் 4 அடி பாதை உள்ளது. சேகர் வீடு கட்டிய போது முடுக்கில் உள்பக்கமாக வெள்ளையடிக்கக் கூடாது என்று பிரச்சனை செய்தேன் என்றால் வெள்ளையடிக்கக் கூடாது என்று சொன்னேன். சேகர் என்னை அடித்தார் என்று சொன்னதற்கு முந்தைய நாள் சேகரின் மனைவியிடம் என் மனைவி பிரச்சனை செய்தாரா என்றால் இல்லை. சண்டை நடந்ததாக சொல்லும் இடம் எப்போதும் 20, 30 பேர்கள் கூடக்கூடிய மெயின் பஜார் என்றால் ஆமாம். சண்டை நடந்தபோது யார் விலக்கிவிட்டார்கள் என்றால் யாரும் இல்லை. சண்டை நடந்த இடத்திற்கு பக்கத்தில் மருத்துவமனை இருக்கிறதா? இல்லையா? என்றால் மேற்கு தள்ளி இருந்தது. சண்டை நடந்த இடத்திலிருந்து வீட்டுக்கு எவ்வாறு சென்றேன் என்றால் நான் போகவில்லை என்னை வேறு ஆள் தூக்கிக் கொண்டு போனார்கள். சாட்சி தற்போது, வீட்டுக்கு செல்லாமல் மருத்துவமனை கொண்டு சென்றார்கள் என்று சாட்சியம் அளிக்கிறார். மருத்துவமனைக்கு என்னை கொண்டு சென்றது யார் என்றால் எனது மனைவி. அவருக்கு தகவல் சொன்னது யார் என்றால் யாரோ சொல்லியுள்ளார்கள். முதலில் எந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் கடையம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு முதலில் ஒரு ஊசி போட்டு தென்காசி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தார்கள். சண்டை நடந்த இடத்தில் எழும்ப முடியாமல் இருந்தபோது போலிசார் வந்தார்களா என்றால் இல்லை. சண்டை 12 மணிக்கு நடந்த பின்னர் எவ்வளவு நேரத்தில் கடையம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் 15 நிமிடங்களுக்குள் சென்றேன். தென்காசி அரசு மருத்துவமனைக்கு வரும்போது மயக்க நிலையில் இருந்தேன். தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்ற

பின்னர் மருத்துவரிடம் என்ன நடந்தது என்று சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் மருத்துவமனைக்கு மறுநாள் வந்து விசாரித்தார். செங்கலால் அடித்ததில் எனக்கு ரத்த காயம் ஏற்பட்டதா? என்றால் இரத்த காயம் இல்லை. சேகருக்கும் எனக்கும் இடப்பிரச்சனை இருப்பதால் நானாக தடுக்கி விழுந்ததில் ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.698/2024
PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | | தொழில் | விவசாயம் |
| கிராமம் | | வயது | 47 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 02.06.2026

(1ம் எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 1வது எதிரி ராஜ்குமாரை எனக்கு தெரியும். என் ஊர்க்காரர். இரண்டாவது எதிரி வினோத்குமார் என்பவரை எனக்கு தெரியாது. கடந்த 24.07.2020ம் தேதி கொரோனா காலகட்டத்தில் அசோக் லைலாண்ட் பத்து சக்கர லாரியை ஏஎஸ்பிஎன் எடை மேடை அருகே நிறுத்தி வைத்திருந்தேன். என்னுடைய லாரியின் பதிவு எண் TN 28 AD1417 ஆகும். சனிக்கிழமை அன்று லாரியை நிறுத்தி விட்டு சென்று விட்டேன். ஊரடங்கு காலம் என்பதால் லாரியை சுத்தம் செய்வதற்காக ஞாயிற்றுக்கிழமை அன்று வந்து பார்த்த போது லாரியை காணவில்லை. லாரியின் மதிப்பு ரூ.5லட்சம் ஆகும். நான் தேடி பார்த்தேன் லாரி கிடைக்கவில்லை. நடவடிக்கை எடுக்க காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினம் மாலை காவல்நிலையத்திலிருந்து என்னை அழைத்தார்கள்.

நான் காவல்நிலையம் சென்றேன். லாரி கிடைத்து விட்டதாக தகவல் சொன்னார்கள். நான் திருடு போன லாரிக்கான ஆவணங்களை போலிசாரிடம் காண்பித்தேன். லாரியை திருடிய நபர்கள் ராஜ்குமார் மற்றும் வினோத்குமார் என போலிசார் தகவல் சொன்னார்கள். காவல் நிலையத்தில் வைத்து நான் அவர்களை பார்த்தேன். நான்

நீதிமன்றத்தில் இடைக்காலமாக மனு தாக்கல் செய்து லாரியை திரும்ப பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள லாரியை தான் நான் நீதிமன்றத்திலிருந்து திரும்ப பெற்றுக்கொண்டது. மேற்படி புகைப்படம் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. லாரியை சவாரிக்காக அனுப்பி வைத்துள்ளேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi